சிந்தனை கிழிக்கும் பேனா !

Written by - வேதா. இலங்காதிலகம் டென்மார்க். -
Saturday, 16 December 2017 14:03 - Last Updated Saturday, 16 December 2017 14:10

வந்தனை செய்ய வேண்டும்
அந்தமின்றியென்னை எழுத வைக்கும்
அந்தரங்கமேதும் இல்லை பகிரங்கம்.
அந்தரிப்போர் யாருக்கும் குரலெழுப்பும்.
இந்தளவு என்றில்லையெவ்வளவும் எழுத
சிந்தனை கிழிக்கும் பேனா.

உந்துதலீயும் பிறர் கருத்துகள்.
எந்திர வில் போன்றது.
ஐந்தெழுத்துத் தொடங்கி ஆதரவு
கொந்தளிக்கும் பிரச்சனைகள் அரிய
சந்தக் கவிகள் என்று எத்தனையோ..
சிந்தனை கிழிக்கும் பேனா.

நீதிமன்றத் தீர்ப்புக் கிழிக்கும்,
சாதிவெறி கிளப்புதலும், தீர்விடுதலும்,
வாதிடலும், வாஞ்சையான சிந்தனைகளும்
மோதி முட்டுதலும் ஒரு
தாதி போலவும் தீப்பொறியிட்டு
கோதுவதுமான இராசாங்கம் இந்தச்
சிந்தனை கிழிக்கும் பேனா.

kovaikkavi@gmail.com

1 / 1